# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.
## S.C.No.95/2022

**Deposition of Witness for : P.W.12**

**Name : Dr.வி. மகேந்தர்**

**Father's Name : .**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.11.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் அதே பணியில் இருந்தபோது, கடந்த 22.10.2021 அன்று முற்பகல் 11.00 மணிக்கு காவல் ஆய்வாளர் ஆரணி தாலுக்கா காவல்நிலையம் குற்ற எண்.1238/2021 நாள் 20.10.2021 சம்பந்தப்பட்ட புருஷோத்தமன், 38 வயது ஆண் பிரேதத்தின் பிரேத பரிசோதனை

விண்ணப்பத்தினை முதல் நிலை காவலர் எண்.2001 திரு. எஸ். சீனுவாசன் அவர்கள் மூலமாக பெற்றுக்கொண்டேன்.

பிரேதத்தின் அங்க அடையாளங்கள் சரிபார்க்கப்பட்டு பிரேத பரிசோதனையானது 22.10.2021 அன்று முற்பகல் 11.10 மணிக்கு தொடங்கப்பட்டது. ஒரு மிதமான போஷாக்கு உள்ள ஆண் பிரேதமானது பிண விரைப்பு இன்றி கண்கள் மூடிய நிலையிலும் கண் பாவைகள் விரிந்தும் காணப்பட்டது. நாக்கு வாயினுள் அறையினுள் காணப்பட்டது. எலும்பு முறிவுக்கு போடப்படும் மாவுக் கட்டு வலது கால் முழுவதும் காணப்பட்டது.

கிருமி தொற்று மிகுந்த தீக்காயம் முகம், மார்பு முன் மற்றும் பின்பகுதி, வயிற்றின் முன் மற்றும் பின்பகுதி, கை கால்களின் முன் மற்றும் பின்பகுதி ஆகிய இடங்களில் காணப்பட்டது. தீக்காயத்தின் மீது மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில் சீழ் படிவ புள்ளிகள் காணப்பட்டது.

இறப்புக்கு முன் ஏற்பட்ட வெளிப்புற காயங்கள்.

1) சீரற்ற சற்று ஆறிய கரும்பழுப்பு நிறத்திலான சிராய்ப்பு காயங்கள் 2x2 செ.மீ, 1x1 செ.மீ , 0.5x0.5 செ.மீ அளவில் இடது முட்டியின் முன் பக்கத்தில் காணப்பட்டது.

2) வலது தொடை எலும்பு நடுப்பகுதியில் இரு துண்டுகளாக முறிந்து அதை சுற்றியுள்ள திசுக்கள் கன்றியும் காணப்பட்டது.

3) தலைப்பகுதியை கூறாய்வு செய்ததில் மண்டை தோல், மண்டையின் ஓடு, மண்டை ஓட்டின் அடிப்பகுதி, மூளை சுற்றியுள்ள சவ்வு ஆகியவை இயல்பான நிலையில் காணப்பட்டது. மூளை நீர் கோர்த்து வீக்கத்துடன்

காணப்பட்டது. மூளை பகுப்பாய்வில் வெளுத்து காணப்பட்டது.

4) மார்பு கூடு, வயிற்று பகுதி, கழுத்து பகுதியை கூறாய்வு செய்ததில், வயிற்று பகுதி 270 எம்.எல். இளம்மஞ்சள் நிறத்தில் நீர் காணப்பட்டது. மார்பு கூட்டில் 180 எம்.எல். இளம்மஞ்சள் நிறத்தில் நீர் காணப்பட்டது. விலா எலும்புகள் இயல்பாக காணப்பட்டது. இருதய உறை இயல்பாக காணப்பட்டது. இருதயம் இயல்பாக காணப்பட்டது. பகுப்பாய்வில் அனைத்து இருதய அறைகளிலும் ரத்தம் நீர்த்த மற்றும் உறைந்த நிலையில் காணப்பட்டது. இருதய வால்வுகள் இயல்பாக காணப்பட்டது. கோரனரி தமனிகள் இயல்பாக காணப்பட்டது. இருதய பெரு தமனிகள் இயல்பாக காணப்பட்டது.

நுரையீரல்கள் இயல்பான நிலையிலும், பகுப்பாய்வில் ரத்தம் தோய்ந்தும் காணப்பட்டது. குரல்வளை, மூச்சு குழல், நாவடி எலும்பு ஆகியவை இயல்பான நிலையில் காணப்பட்டது. இரைப்பையில் 10 எம்.எல். கரும்மஞ்சள் நிறத்தில் பிசுபிசுப்பான நீர் இயல்பான வாசத்துடன் காணப்பட்டது. இரைப்பையின் உள்சுவர் இயல்பாக காணப்பட்டது.

கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் இயல்பான நிலையில் காணப்பட்டது. பகுப்பாய்வில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக காணப்பட்டது. முதுகெலும்பு மற்றும் இடுப்பு எலும்பு இயல்பாக காணப்பட்டது. பிரேத பரிசோதனையானது பிற்பகல் 12.10 மணிக்கு முடிவுற்றது. உடல் உள்ளுறுப்பு மாதிரிகள் ரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது.

<u>இறுதி கருத்து</u> - பிரேத பரிசோதனை மற்றும் ரசாயன பரிசோதனை அறிக்கையின்படி பிரேதமானவர் மிக அதிகமான தீக்காயத்தால் ஏற்பட்ட

கிருமி தொற்று அதிர்வு காரணமாக இறந்திருக்கக்கூடும் என்று சான்று அளித்தேன். பிரேதமானவர் பிரேத பரிசோதனை தொடங்குவதற்கு 2 1/2 நாட்களுக்கு முன்பு இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10. இறுதி கருத்துரை அ.சா.ஆ.11. உடல் உள்ளுறுப்பு பகுப்பாய்வு ஆய்வறிக்கை அ.சா.ஆ.12. இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரேதத்தின் எரிந்த தோல் பகுதி மற்றும் எரியாத தோல்பகுதி ஆகியவற்றை சேகரித்து ரசாயன ஆய்விற்கு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். அ.சா.ஆ.12ல் அனுப்பப்பட்ட தோலிலோ அல்லது பிளாஸ்டிக் பாட்டிலிலோ பெட்ரோலோ, டீசலோ, மண்ணெண்ணெய்யோ அல்லது எளிதில் தீப்பற்றி எரியக்கூடிய பொருட்கள் கண்டறியப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.